# ஒளி ஒளிவிலகல்  கருவிழி ஒட்டறுவை-
# (கெரடெக்டோமி) (PRK)

## நோயாளியின் தரவு

நோயாளியின் பெயர்................................................... வயது/பாலினம் .......................
நோயாளியின்அடையாளம்: ............................ தேதி ....................................................
மகன் / மகள்............................................................ முகவரி ...........................................
தொலைபேசி...............................................................................................................

## மருத்துவம்நடைபெறும்இடம்

## ஒளி வழி ஒளி விலகல் கருவிழி பகுதி நீக்க அறுவை சிகிச்சைக்கு ஒப்புதல் அளிக்கையில் பின் வருவனவற்றை புரிந்து கொண்டேன் :

இந்த அறுவை சிகிச்சையின் நீண்ட நாள் பலன்கள் / பக்கவிளைவுகள் முழுமையாக அறியப்படவில்லை. இந்த சிகிச்சையின் நோக்கம் - கண் கண்ணாடிகள் மற்றும் கருவிழி தொடு ஆடிகள் ( காண்டாக்ட் லென்ஸ்) ஆகியவற்றை நம்பி இருத்தலைக் குறைத்தல் . ஆனாலும் , எல்லா வகை சிகிச்சையையும் போல இதிலும் பலன்களுக்கு உத்தரவாதம் கொடுக்க இயலாது என்பதைப் புரிந்து கொண்டேன் . உதாரணமாக

1. இந்த சிகிச்சைக்குப் பின் அதிக அல்லது குறைவான திருத்தம் ஏற்பட்டு எனக்கு தூர அல்லது கிட்டப்பார்வை ஏற்பட வாய்ப்புள்ளது ; அல்லது எனது புள்ளிக் குவியமின்மை (ஆஸ்டிக்மாடிசம் ) அளவு அதிகம் ஆக வாய்ப்புள்ளது ; இது சிகிச்சை செய்து சரிப்படுத்தக்கூடிய அல்லது இயலாத நிலையில் இருக்கவும் வாய்ப்புள்ளது என்பனவற்றைப் புரிந்து கொண்டேன் . அதிக , குறைந்த திருத்தம் என்பது பொதுவாக நாற்பது வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு வர வாய்ப்புள்ளது என்பதையும் , அவர்கள் சில அல்லது முழு நேரங்களில் தூர அல்லது கிட்டப் பார்வைக்கு கண்ணாடி அணிய வேண்டும் என்பதையும் நன்கு அறிந்து கொண்டேன் .
2. எனக்கு தற்போது பக்கத்தில் படிக்க கண்ணாடி தேவைப்படுகிறது என்றால் , இந்த சிகிச்சைக்குப் பின்னரும் கண்ணாடி தேவைப்படலாம் . படிப்பதற்கு கண்ணாடியின் துணை அதிகரிக்கலாம் ; அல்லது மற்றவர்களை விட விரைவாக கண்ணாடி தேவைப்படலாம் .
3. இதற்குப் பின்னரும் கண் சொட்டு மருந்துகள் விடுதல், கண்ணாடி அல்லது கருவிழி தொடு ஆடி ( கடினம் அல்லது மென்மை )அணிதல் ,அல்லது மீண்டும் இதே அறுவை சிகிச்சை அல்லது வேறு அறுவை சிகிச்சைகள் தேவைப்படலாம் .

4. கண்ணாடி அல்லது கருவிழி தொடு ஆடி அணிந்த பின்னரும் கூட என் பார்வை குறைவாக இருக்கலாம் .
5. இரண்டு கண்களுக்கும் இடையே கண்ணாடி திருத்தத்தில் வேறுபாடு இருக்கலாம் ; அதனால் கண்ணாடி அணிவது சிரமமாக அல்லது முடியாமல் போகலாம் ; கருவிழி தொடு ஆடி பொருத்துதலும் அணிவதும் கூட கடினமாகலாம் .
6. எனக்கு அளித்த தகவல்களின் அடிப்படையில் இந்த அறுவை சிகிச்சை செய்துகொண்ட நோயாளிகளுக்கு பின்வரும் பக்கவிளைவுகள் இருக்கலாம் என்பதைப் புரிந்துகொண்டேன் :

அ. **குறிகிய கால விளைவுகள்** - சிறிது வலி அல்லது சுகமின்மை ( முதல் 72- 96 மணிகளுக்கு ), கருவிழி வீக்கம் , இரட்டைப் பார்வை , உறுத்தல் , நிழல் பிம்பம் , கண் கூசுதல் , நீர் வடிதல் . இவை வழக்கமான புண் ஆறுதலினால் ஏற்படுகிறது என்பதை அறிந்து கொண்டேன்.

ஆ . **நீண்ட கால விளைவுகள்** :

*கலங்களான பார்வை* : கருவிழியின் முழுத் தெளிவு என்ற நிலையில் இழப்பு . இது பெரும்பாலும் பார்வையை மறைப்பது இல்லை . காலப்ப்போக்கில் மறையக்கூடும் .

*நட்சத்திர வெடிப்பு* : சிகிச்சைக்குப் பின் சில நோயாளிகளுக்கு - கண் கூச்சம் , நட்சத்திரங்கள் வெடித்து சிதறுவது போன்ற தோற்றம் , ஒளியைச் சுற்றி வட்டம் போன்றவை நிகழலாம் . குறைந்த ஒளியில் தெளிவான பார்வையில் சிக்கல்கள் ஏற்படுவதால் , மாலை நேரத்தில் வாகனம் ஓட்டுவதில் சிரமம் ஏற்படலாம் . இதற்கு பல காரணிகள் இருந்தாலும் , மங்கிய ஒளியில் பாப்பாவின் அதிக விரிவடையும் தன்மை மற்றும் அதிகக் குறைபாடு சீராக்கப்படுதல் போன்ற காரணங்கள் முக்கியமானதாகும் . பெரும்பாலனவர்களுக்கு இது காலப்போக்கில் சரியாகிவிடும் ; இரவில் தகுந்த கண்ணாடி அணிவதாலோ அல்லது சொட்டு மருந்துகள் விடுவதாலோ இது சரியாக்கப்படும் . ஆனால் சிலருக்கு இந்தக் குறைபாடு நிரந்தரமாக இருக்கலாம் . ஆகவே , தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ இரவுப் பார்வையில் குறைபாடு எனக்கு ஏற்படலாம் என்பதையும் அது கண்ணாடி மற்றும் சொட்டு மருந்துகள் மூலமாக ஓரளவு தீர்க்கப்படலாம் என்பதையும் உணர்ந்து கொண்டேன் . தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ இரவுப் பார்வை , குறிப்பாக இரவில் வண்டி ஓட்டுதல் என்பது சிரமமான செயலாக இருக்கலாம் எனபதை நன்கு அறிந்து கொண்டேன் . இந்த ஆபத்துகள் எனக்கு விளக்கிக் கூறப்பட்டன .

*சிறந்த பார்வை குறைவு* : கண்ணாடி அல்லது கருவிழி தொடும் ஆடி அணிந்த போதிலும் கூட என் சிறந்த பார்வையில் குறைவு ஏற்படலாம் என்பதை அறிந்து கொண்டேன்.

*கண் நீரழுத்த உயர்வு* : சிகிச்சைக்குப் பின் உபயோகிக்கும் மருந்துகளால் என் கண்ணீர் அழுத்தம் அதிகமாகலாம் என்பதையும் அதற்கு சிகிச்சை அளிப்பதலோ , காரணி மருந்துகளை நிறுத்துவதாலோ, அதை சரி செய்ய இயலலாம் என்பதையும் அறிந்து கொண்டேன்

*குறைந்த அல்லது அதிகமான கிருமித்தொற்று* : குறைந்த நோய்த்தொற்று கிருமிகொல்லி மருந்துகளால் கட்டுபடுத்த இயலும் என்பதையும் , அதிக கிருமித்தொற்றை மருந்துகளால் குணப்படுத்த இயலாமல் கருவிழியில் தழும்பு ஏற்படலாம் என்பதையும் அதற்காக மீண்டும் இச் சிகிச்சையோ, கருவிழி மாற்று அறுவை சிகிச்சையோ தேவைப்படலாம் என்பதையும் நான் நன்கு புரிந்து கொண்டேன் .

*கூம்புக் கருவிழி* : சில நோயாளிகளுக்கு கூம்புக் கருவிழி என்னும் நிலை ஏற்பட்டு பார்வைக் குறைபாடு நேரலாம் . இது வழக்கமான மக்கள் தொகையில் இரண்டாயிரம் பேர்களில் ஒருவருக்கு நேரும் ஒரு நோய் . பல பரிசோதனைகள் செய்து இந்த நிலை வர வாய்ப்பிருக்கிறதா என்பதை சிகிச்சைக்கு முன்பே கண்டறியலாம் என்றாலும் , சில நோயாளிகளுக்கு , சிகிச்சைக்கு முந்தைய கருவிழித் திசுப் பரப்பு ( topography) மற்றும் கருவிழித் தடிமன் (pachymetry) சரியாக இருந்த போதிலும் , சிகிச்சைக்குப் பின் கூம்புக் கருவிழி ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதையும் நான் அறிந்து கொண்டேன் . கூம்புக் கருவிழி தானாகவே ஏற்படுவதால் , சிகச்சைக்கு முன் ஒருவருக்கு உறுதியாக இந்த ஆபத்து நிகழாது என்று உறுதியிட்டு கணிக்கக் கூடிய பரிசோதனைகள் இல்லை . மேலும் இந்நிலை குறைவாக இருந்தால் அதற்காக கண்ணாடி , கருவிழி தொடு ஆடி அணிந்து சரி செய்யலாம் ; அதிகமாக இருந்தால் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படலாம் என்பதையும் அறிந்து கொண்டேன் .

*அடிக்கடி நிகழாத பக்க விளைவுகள்* : அரிப்பு , வறட்சி , உறுத்தல் , இரட்டைப் பார்வை அல்லது நிழல் படிந்த பார்வை , கருவிழியில் அழற்சி , தொடர்ந்த மேல்பரப்புக் குறைபாடு , புண் , கிருமித் தொற்று ( கட்டு கருவிழி தொட்டு ஆடி - BANDAGE CONTACT LENS என்பதை உபயோகிப்பதாலும் இவை நிகழலாம் ) , புரை போன்ற பலவும் , ஏற்கனவே சிகிச்சை செய்த கொண்ட சில நோயாளிகளால் கூறப்பட்டுள்ளது. அவை எனக்கும் வரலாம் என்பதை புரிந்து கொண்டேன் .

இந்த சிக்சைக்குப்பின் பாதியோ அல்லது முழுக்கவோ என் பார்வை போய்விட மிக மிக அரிதான வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன் .

இந்த சிகிச்சையில் வரும் அனைத்து பின் விளைவுகளையும் முன் கூட்டியே அறிவிக்க இயலாது என்பதையும் உணர்ந்து கொண்டேன் . மோசமான விளைவுகள் என்பது சில நாட்களிலோ , வாரங்களிலோ , மாதங்களிலோ , வருடங்களிலோ கூட ஏற்படலாம் என்பதை அறிந்து கொண்டேன் .

**இது ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சிகிச்சை என்பதையும் , இது கட்டாயமாக செய்தே தீரவேண்டியது இல்லை என்பதையும் , இதன் விளைவுகளை மீட்டு பழைய நிலைக்கு எப்போதும் மீண்டும் கொண்டு வர இயலாது என்பதையும் தெளிவாகப் புரிந்து கொண்டேன் .**

**மகளிருக்காக** : நான் கர்ப்பமுரவில்லை ; பாலூட்டும் தாய் அல்ல ; கர்ப்பம் சிகிச்சையின் விளைவை தீமையாக்கும் என்பதையும் நன்கு புரிந்து கொண்டேன் .

என் மருத்துவரால் இவை அனைத்தும் நன்கு விளக்கப்பட்டுள்ளது ; அவர்

என் அனைத்து சந்தேகங்களுக்கும் விளக்கமளித்தார் ; ஏனவே ,

**ஒளி வழி ஒளி விலகல் கருவிழி பகுதி நீக்க அறுவை சிகிச்சை ( PHOTOREFRACTIVE KERATECTOMY - PRK) செய்து கொள்ள மனப்பூர்வமாக சம்மதிக்கிறேன் .**

நோயாளி/ பெற்றோர்/ பாதுகாவலரின் கையொப்பம் / கட்டைவிரல் பதிவு:
பெயர்:............................................உறவு...................தேதி...........................................................
முகவரி:.......................................................................................................................................
தொலைபேசி (அலு) .................. (வீடு.) ............................ (கைபேசி.).............................

## மருத்துவரின் பிரகடனம்

செய்யப்படும் அறுவை சிகிச்சை முறையின் இயல்பு மற்றும் பின் விளைவுகளை நோயாளிக்கு விளக்கிக் கூறியுள்ளேன் . நோயாளிக்கு தொடர்புள்ள நேரக்கூடிய இன்னல்களையும் விவரித்துள்ளேன் .
நோயாளிக்கு கேள்விகள் கேட்கும் வாய்ப்பையும் அதற்கான விடைகளையும் கொடுத்துள்ளேன் .

மருத்துவரின் கையெழுத்து ..................................................................
மருத்துவரின் பெயர் ..................................................................
தேதி ..................................................................

| சாட்சி 1 | சாட்சி 2 |
|---|---|
| கையொப்பம்: .................................. | கையொப்பம்: .................................. |
| பெயர்:.................................................... | பெயர்:.................................................... |
| முகவரி: ........................................... | முகவரி: .. ........................................ |
| தொலைபேசி .................................. | தொலைபேசி: .................................. |
| கைபேசி.............................................. | கைபேசி ............................................. |